உ

முருகன் துணை

காந்தமலை முருகன்

# தோத்திர மஞ்சரி



வித்துவான்

கி. வா. ஜகந்நாதையரவர்கள்

இயற்றியது.

1933

பதிப்புரிமை]

[விலை அணா 4.

உ

முருகன் துணை

காந்தமலை முருகன்

# தோத்திர மஞ்சரி



வித்துவான்

கி. வா. ஜகந்நாதையரவர்கள்

இயற்றியது.

1933

பதிப்புரிமை]

[விலை அணா 4.

முருகன் துணை

# முகவுரை

கொங்கு நன்னாட்டிற் காவிரி வடகரையில் உள்ள சிவ தலமாகிய மோகனூரின்கண் விளங்கும் காந்தமலையிற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் இளமுருகன் திருவடிக்கண் உலையா அன்புடையாரொருவர் சூட்டியது இப்பாமாலை யாகும். அக்கடவுளை நாவாரப்பாடி வழிபடவேண்டுமென்னும் நோக்கத்தால் எளியேனும் நண்பர்களும், அடிக்கடி அருந் தமிழ்ச் சுவையையும் முருகன்பாலன்பையும் பலவகையால் எமக்கு ஊட்டிவரும் பெரியார் பிரம்மஸ்ரீ வித்துவான் கி. வா. ஜகந்நாதையரவர்களைச் சிலசெய்யுட்கள் எழுதியளிக்க வேண்டி னோம். காந்தமலையானை இதயக் கோயிலிற் சிறைப்படுத்திய அன்னார் பல வருடங்களுக்கு முன் எங்களுக்கு ஏற்றவாறு எளிய நடையில் அவ்வப்போது எழுதி விடுத்த பாக்களிற் சிலவற்றைத் தொகுத்து இந்நூலுருவத்தில் வெளியிட முன் வந்தேன். காந்தமலையான் புகழைப் பாடி இன்பங்காண்பதற்கு இப் பாக்கள் நற்றுணையாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

இதனைத் தொகுக்கும் பொழுது, பாக்களை யியற்றியவ ருடைய நண்பரும் முருகன்பால் வீறிய அன்பினரும் ஆகிய பிரம்மஸ்ரீ வித்துவான் ச. கு. கணபதி ஐயரவர்கள் தமக்குத் தம் நண்பர் எழுதிய கடிதங்களில் அமைத்திருந்த பாடல் களை அளித்துதவியதோடன்றி இப்பாக்களைப் புத்தக உருவாக்குவதற்குப் பெருந்துணையாக இருந்தார்கள். அவர் களை எழுமையும் மறவேன்.

மோகனூர்,<br>16-8-1933

இங்ஙனம்:<br>பொ. முருகன்

உ

# காந்தமலை முருகன்

# தோத்திர மஞ்சரி

---

## விநாயகர் காப்பு

### வெண்பா.

சீராருங் காந்தச் சிகரியிலே வீற்றிருக்கும்
போராரும் வேலன் புகழ்பாட—ஏராரும்
ஒற்றைவெண் கோடுடைய வும்பல் முகப்பெருமான்
நற்றுணைய தாகும் நயந்து.

### கோச்சகக் கலிப்பா.

பூவிரியுங் காலெடுத்துப் பூசைசெயே னுள்ளுருகி
நாவிரியும் பாமாலை நன்கணியேன் பூவுலகிற்
பாவியிவ னென்றெவரும் பன்னவிருந் தேனருளாய்
காவிரிசூழ் மோகனூர்க் காந்தமலை வேலவனே. 1.

எண்ணூர நின்னை இருத்தேன் அருந்துதிகள்
பண்ணேன்நின் கோயிலெட்டிப் பாரேன் இனியிந்தப்
புண்ணான நெஞ்சனுக்கும் புகலுண்டோ தேவர்கள்தம்
கண்ணான தேவேகாக் காந்தமலை வேலவனே. 2.

எழுத்தறியேன் சொல்லறியே னெண்ணிநினை நாவார
வழுத்தறியேன் அன்பால் மனமுருகிப் பக்குவத்திற்
பழுத்தறியேன் அந்தோ படுபாவி யானேனென்
கழுத்தரியா வாழ்கின்றேன் காந்தமலை வேலவனே. 3.

நீராடேன் றூயவுடை நேர வுடுத்தறியேன்
சீராடும் நின்பூசை செய்தறியேன் நோன்புகளைப்
பாராடி மாறு பயின்றறியே னென்செய்கேன்
காராடும் பூம்பொழில்சூழ் காந்தமலை வேலவனே. 4.

எண்ணாத பாவி யிவனென்று புறக்கணித்தல்
பண்ணாதே பண்ணிற் பரிதவிப்பே னையாவென்
அண்ணா அரசே அமுதே அனைத்துயிர்க்கும்
கண்ணே கடிபொழில்சூழ் காந்தமலை வேலவனே. 5.

இன்றுலகி னின்பம் இருந்துபுசித் திட்டுநமன்
அன்றுவருங் காலத்தி லையோ விளைதுயரம்
ஒன்றுகொலோ உள்ளேன் உனவடிகள் என்செய்கேன்
கன்றுபசு வோடுறையுங் காந்தமலை வேலவனே. 6.

உடலிருக்கும் போதே உயிர்க்குறுதி தேடறியேன்
படலிருக்கு மெண்ணத்துப் படருநம னார்தமர்வந்
தடலியற்றுங் காலத்தி லார்வந்து காப்பாரே
கடலிருக்கு நற்கருணைக் காந்தமலை வேலவனே. 7.

பொறிவாயி லைந்தவியாப் புலையனே னின்னருளே
செறிவாய நன்னிலையிற் சேர்குவனோ சேரேனோ
அறிவாய திருவுருவத் தையா கருமந்தி
கறிவாய துணருகுக்குங் காந்தமலை வேலவனே. 8.

நான்செய்தேன் நான்செய்தேன் நலமெல்லா மென்றகந்தை
தான்செய்தே னன்றித் தளிர்ப்பதங்க ணினைத்திலனே
தேன்செய்த பூங்கடப்பந் திருமாலை மார்பாபூங்
கான்செய்த பைம்பொழில்சூழ் காந்தமலை வேலவனே. 9.

மல்லாடு மைம்புலனுன் மதிமயங்கிப் புவியகத்தே
சொல்லாடும் பலபவமுந் துணிந்துபுரிந் தனனந்தோ
அல்லாடு மனத்தேனை யாண்டருளு மாறுமுண்டோ
கல்லாடுந் தோளுடையாய் காந்தமலை வேலவனே. 10.

வேதா வகுத்த விதியீதோ நின்பெயரை
ஓதாத நாவுடையேன் உருகாத நெஞ்சுடையேன்
தீதாய நடையுடையேன் சேருமல மாந்தொகுதி
காதார்வ முடையர்தொழுங் காந்தமலை வேலவனே. 11.

ஆர்வந் திகழ்ந்த வகமுடையார் நினையறிந்தே
சீர்வந்த இன்பத்திற் றிளைத்திருத்தல் கேட்டிருந்தும்
பார்வந்த பயனுநிற் பணிந்திருக்கு மாறறியேன்
கார்வந்த செஞ்சிகரக் காந்தமலை வேலவனே. 12.

இன்றுயிரை நமன்பிரித்தே யேகிவிடி னென்செய்வேன்
நின்றுகளில் தாணினையும் நெஞ்சமிலேன் வஞ்சனையேன்
என்றுனதன் புடையேனு வின்புறுவே னென்றுமனம்
கன்றுகின்றேன் வந்தருளாய் காந்தமலை வேலவனே. 13.

பாவவிலக் கணத்திற்கோர் பாங்கா ரிலக்கியமாய்
நீவவருந் தீவினையேன் நிற்கின்றேன் உலகமெனை
நோவவசை கூறுவதும் நோக்ககிலேன் உய்வன்கொல்
காவசைய மயிலாடுங் காந்தமலை வேலவனே. 14.

தத்துவங்க ளாயுந் தகுதியிலேன் நல்லவர்பாற்
பத்தியிலே னன்னடையிற் பயின்றுமிலேன் பாரகத்தே
எத்துபுல வழியலைந்தே னென்னையீ டேற்றுவையோ
கத்துகட லுலகுபுகழ் காந்தமலை வேலவனே. 15.

நின்னுருவ முள்ளுணர்ந்தே நெகிழ்ந்திருக்க வேண்டுமென்றால்
மன்னியவென் பொறிப்பகைஞர் மாறுபுரி கின்றனரே
துன்னியநின் றேற்றமுறத் தூயவருள் தந்தளிப்பாய்
கன்னவிலுந் திண்டோளாய் காந்தமலை வேலவனே. 16.

இன்னம் பிறப்பி லிசைந்துதுயர் படமாட்டேன்
முன்னம் அடைந்ததுயர் முற்றும் அமையுமினி
நின்னன்பே தலைக்கொள்ள நீயருளாய் இல்லையெனின்
கன்னெஞ்ச னென்பேன்காண் காந்தமலை வேலவனே. 17.

மாலுடையேன் போற்று மதியில்லேன் ஆசைபொருட்
பாலுடையேன் நின்னைப் பணியகில்லேன் ஆயினினி
ஏனுடைய தொண்டனென வெவ்வாறு கொள்வாய்செங்
காலுடைய தண்டையுளாய் காந்தமலை வேலவனே. 18.

ஆனவிரு மூன்றுரு மக்கரங்க ளுவியலச்
சானஞ்செய் தறிந்திலேன் றக்கவரு ளெற்குறுமோ
மோனஞ்செ யுள்ளத்து முளைத்தெழுந்த கதிர்விளக்கே
கானஞ்செய் வண்டர்பயில் காந்தமலை வேலவனே. 19.

கட்டளையிட் டென்னையிங்குக் காட்டினைபுன் புலப்பகைப்
மட்டளையும் நின்னடியில் மனமிருக்க வொண்ணுதோ [பால்
நட்டளையு ஞானமுறு நற்றவத்தார் பெற்றவைப்பே
கட்டளைசெய் மலர்ப்பொழில்சூழ் காந்தமலை வேலவனே. 20.

---

வளமலியும் புவிவாழ்க்கை மாண்புடைய தெனநினைந்தே
தளமுடைய நின்னடியைச் சாரும் வழியறியேன்
களமுடையர்க் கரியவனே காந்தமலை மேயவவென்
உளமுருக வேண்டாவோ உளமுருக வேண்டாவோ? 21.

இனமுடைய தொண்டரெலாம் எழிலாருங் காந்தமலை
முனமடைந்து நின்னருளில் மூழ்குகின்றார் ஏழையேன்
கனமுடைய பழம்பாசக் கட்டளைந்தேன் இனிவேல
மனமுருக வேண்டாவோ மனமுருக வேண்டாவோ ? 22.

பெருத்ததுய ருடையோரும் பீடுறுநின் காந்தமலை
வருத்தமறச் சேர்ந்தின்பம் மாந்துகின்றார் கந்தபிரான்
உருத்தெரியா தேயேங்கி யோர்வழியும் பெறாவடியேன்
கருத்துருக வேண்டாவோ கருத்துருக வேண்டாவோ ? 23.

அஞ்சுகின்ற போதெல்லாம் ஆறுமுகங் கொண்டடியார்
தஞ்சகமே கருதியவர் தம்முனம்வந் தருள்முருக
விஞ்சுநின்றன் காந்தமலை மேவி யடியேனும்
நெஞ்சுருக வேண்டாவோ நெஞ்சுருக வேண்டாவோ ? 24.

பண்ணுருகப் பாடிப் பரிந்துநின்று ளேபரவி
நண்ணுகின்ற ரன்பர்கள் நாயேனின் காந்தமலை
மண்ணுமணி யாம்நின்னை வணங்கவரு வேனிலைஎன்
எண்ணுருக வேண்டாவோ எண்ணுருக வேண்டாவோ ? 25.

அள்ளுசுவை யாரமுதா யாருயிராய்க் காந்தமலைக்
குள்ளிலகுஞ் சோதீ உனைநினைந்தே யானந்த
வெள்ளமிசை யாழ்ந்தெல்லாம் விட்டுத் தனித்துநினைந்
துள்ளுருக வேண்டாவோ உள்ளுருக வேண்டாவோ ? 26.

மடலவிழு மலரனைய மாண்புறுநின் சேவடிகள்
கடலவிழு மன்பினொடுங் கருதுகிலேன் காந்தமலை
மிடலவிழ வீற்றிருக்கும் வித்தகநா னுனைநினைந்தே
உடலுருக வேண்டாவோ உடலுருக வேண்டாவோ? 27.

தன்புடையே யன்புடையார் தமக்கருளும் காந்தமலை
மன்புடையே நல்லருளை வாங்கிடலா மென்பரதை
வன்புடையேன் மறந்துழன்றேன் வடிவேல நினையுள்ளி
என்புருக வேண்டாவோ என்புருக வேண்டாவோ? 28.

மையுடைய உலகமிசை வாழ்வதினு முயிர்மாய்த்தல்
செய்வதுவே நன்றென்று சிந்தைசெய்வேன் காந்தமலை
ஐயநீ யருள்கிலையே லந்தோநான் நினைநினைந்தே
மெய்யுருக வேண்டாவோ மெய்யுருக வேண்டாவோ? 29.

மகமுறையிற் செயல்வேண்டேன் மறையோத லதும்வேண்டேன்
சுகமுறுபூம் பொழில்சூழ்ந்த காந்தமலை வலம்புரியின்
நகமிலவுந் திருவடியோய் நல்வேல நினையுள்ளி
யகமுருக வேண்டாவோ யகமுருக வேண்டாவோ? 30.

---

புகழ்வேண்டேன் பிறர்பாலே புகல்வேண்டேன் உலகமெலாம்
திகழ்கல்வி நலம்வேண்டேன் சீர்வேண்டேன்பொருள்வேண்டேன்
முகிழ்நகிலார் சுகம்வேண்டேன் மூண்டவளக் காந்தமலை
மகிழ்முருக நாயேனுன் மலியருளே பெற்றிடினே. 31.

உடல்வேண்டே னுயிர்வேண்டே னுயர்நினைவு பலவேண்டேன்
அடல்வேண்டேன் பிறதெய்வத் தருள்வேண்டேன் தெருள்வேண்
மடல்சூழ்ந்த மலர்க்கரத்து வள்ளால்நற் காந்தமலைக் [டேன்
கடலனைய நின்னன்பு கவினருளைப் பெற்றிடினே. 32.

மனைவேண்டேன் ஆதனங்கள் வாகனங்க ளவைவேண்டேன்
நனைமலர்த்தார் நல்லுடைகள் நாடணிக ளும்வேண்டேன்
வினையறுக்கும் வேதியனே மேம்படுநற் காந்தமலை
தனைவிளக்கும் விளக்கேநின் தண்ணருளே பெற்றிடினே. 33.

நூல்வேண்டே னூரன்வேண்டேன் நூலறிந்தோ ரவைவேண்டேன்
பால்வேண்டேன் பழம்வேண்டேன் பதிவேண்டேன் பணிவேண்
தால்வேண்டும் புகழ்வேண்டேன் சார்ந்துயரும் காந்தமலை [டேன்
மேல்வேண்டும் வரமளிக்கும் வித்தகநின் னருள்பெறினே. 34.

பிறர்மகிழப் பலபணிகள் பெரியனசெய் துலகுபுகழ்
உறவமையும் நிலைவேண்டேன் உலகத்தை யினிவேண்டேன்
நறவமையும் தார்க்கடம்பா நல்லோர்சொல் காந்தமலை
அறவநின தின்னருளே யடியனேன் பெற்றிடினே. 35.

குலம்வேண்டேன் குணம்வேண்டேன் குறிவேண்டே னுயர்தரத்த
நலம்வேண்டேன் நயம்வேண்டேன் நகர்வேண்டேன் உடலின்
பலம்வேண்டேன் காந்தமலைப் பதிவாழுங் குமரேச [மிகும்
உலம்வேண்டு தடந்தோளா உன்னருளை யான்பெறினே. 36.

குருவேண்டேன் மனுவேண்டேன் குலமனைவி யரைவேண்டேன்
மருவுறையுங் குழல்வள்ளி மணவாள காந்தமலை
வருபவர்க்கு மலமொழிக்க வாய்ந்தொளிரும் மணிவிளக்கே
தருநிகருங் கொடைக்கையாய் தந்தாய்நின் னருள்பெறினே.

கலன்வேண்டேன் கடிவேண்டேன் கமழ்மணஞ்சேர் குழலார்தம்
நலன்வேண்டேன் நூலறியும் நசைவேண்டே னவையாயும்
புலன்வேண்டேன் பொருள்வேண்டேன் புங்கவர்சூழ் காந்தமலை
வலன்வேண்டும் வடிவேல வாய்ந்தநின்ற னருள்பெறினே.

தந்தையொடு தாய்வேண்டேன் தமர்வேண்டேன் சேய்வேண்டேன்
பந்தமுறும் வினைவேண்டேன் பரிவுடைய மனம்வேண்டேன்
அந்தமுறும் பொருள்வேண்டேன் ஆசகலுங் காந்தமலைக்
கந்தபிரான் நின்னுடைய கவினருள்யான் பெற்றிடினே. 39.

வானுலகும் பெறவேண்டேன் மண்ணரசும் யான்வேண்டேன்
ஞானவிலும் படிவேள்வி நோன்பிவைகள் செயவேண்டேன்
தேனவிழும் மலர்ப்பொழில்சேர் செம்மைநலக் காந்தமலை
மேனகுமா முருகநின்றன் வீறருள்யான் பெற்றிடினே. 40.

---

தண்மலர்க்காப் பொங்கரிடைத் தழைமாவி லின்பயர்ந்து
பண்மிழற்றும் பூங்குயிலே பாவியென தாவியெலாம்
உண்முறுக வைத்தருளு மும்பர்பிரான் காந்தமலைக்
கண்மணியை வருமாறு கவினுறவே கூவாயோ? 41.

மாரன் றனக்கோர் வடிவாருங் காகளமாய்ப்
பாரன் புடையார்க்கும் பாணியுடைக் காமஞ்செய்
நீரொன்றும் பூங்குயிலே நீள்சோலைக் காந்தமலைப்
பேரன்பன் வேலவனைப் பீடுறவே கூவாயோ? 42.

மேனிகரி யாயெனினும் வீணையிசை போற்குரலால்
தானிகரில் செம்மைசேர் தண்மாங் குயிற்பிள்ளாய்
நீனிறத்த கடற்குடிக்கு நீள்வேலான் காந்தமலை
மேனிலைத்த முருகனையே வேண்டுபுநீ கூவாயோ? 43.

காக்கைக்கட் சியிற்பயின்று காமன்வருங் கோலமெலாம்
தூக்கிச்சொல் லுஞ்சின்னத் தூவிக் குயிற்பிள்ளாய்
காக்கைக்கு வேலுடைய கண்மணியெங் காந்தமலைக்
கோக்கைக் கடம்பன்வரக் குளிரிசையாற் கூவாயோ? 44.

வாளா கதறிநல வாழ்விழக்கும் பேதையர்போல்
கோளாரை யுங்குறியாக் குரலிசையேல் பூங்குயிலே
நீளார மார்புடையான் நேயமுறு காந்தமலைத்
தோளாத முத்தனையே துனைந்துவரக் கூவாயோ? 45.

வேனலெலா மின்பயர்ந்து மேன்மழையிற் றுன்புற்றும்
கானகல மோவாக் கருங்குயிலே காந்தமலைக்
கோனெனமையா ளுங்குமரன் கூர்வேற் கரத்தமலன்
ஞானவுரு வாயவனை நாடிவரக் கூவாயோ ? 46

கூடினவர் கட்கமுதாங் குரலெழுப்பும் பூங்குயிலே
நாடினவர்க் கெல்லா நலமு மருள்குமரன்
வாடியவென் மலமெல்லா மாயவடர்க் குங்காந்தப்
பீடுறுமா மலையானைப் பேணுபுநீ கூவாயோ? 47

பிள்ளைக் குயிலே பிறர்வருத்தம் நோனாத
உள்ளத்தார்க் கென்று முறவனை மாக்கருணை
வெள்ளத்தான் றன்னை விளங்குபொழிற் காந்தமலைக்
குள்ளுற்ற கோவை யுவகையுறக் கூவாயோ ? 48.

சீறலகால் மாந்தளிரைக் கோதிச் சிறந்தவிசை
வீறுகுர லையெழுப்பும் வென்றிக் குயிற்பிள்ளாய்
ஊறுமறி வாமுருவன் உயர்காந்த மாமலைவாழ்
ஆறுமுகன் றன்னைவர வன்புடனே கூவாயோ? 49

குயிற்பிள்ளா யுன்னைக் குறித்தே தொழுகின்றேன்
வெயிற்கமையு மேனியுடை வித்தகன்காந் தக்குன்றன்
மயிற்பரியா னெங்கள் மலமறுக்கும் பெருவள்ளல்
அயிற்கரத்தான் வருமாறே யார்வமொடுங் கூவாயோ ? 50.

---

மண்ணுளும் பிறவியெலாம் வாய்ந்துனையான் எள்ளளவும்
எண்ணேனே யாயிடினு மின்றே யிரங்குகின்றேன்
கண்ணே கருத்தேசீர்க் காந்தமலை வாழ்ந்தருளும்
திண்ணுரும் மணிவேலாய் சேவடிநீ காட்டாயோ? 51.

ஆறக் கரமனுவை யையோ வறிந்துரையேன்
மாறக் கரவெல்லா மனந்திருத்த மாட்டாதேன்
தேறத் தெருளில்லேன் சீர்க்காந்த மலையுடையாய்
சீறக் கரவேலோய் சிலம்பேனும் காட்டாயோ? 52.

எத்தனையோ வெண்ணமெலா மெண்ணியிருந் தேயுழன்றேன்
பித்தனையே போன்மயங்கிப் பேதுறுவேன் மயல்தீரக்
கத்தவண்ட ரறைபொழில்சூழ் காந்தமலை வேலாநீ
இத்தருண மெளியேற்குன் இடையேனும் காட்டாயோ? 53.

பிறதெய்வத் தாற்பயனென் பேதைமனங் காணவிலை
சிறுமைதவிர் சீர்த்தியென்பாற் சேர்ந்ததிலை யாயினுநின்
உறுபுகழார் காந்தமலை உற்றடைந்தேன் வேலாநின்
மறுவற்ற விடையிலுடை மணியேனுங் காட்டாயோ? 54.

மாயையிருண் மூட மதிமயங்கித் திரிவேனை
மேயவறி வாம்கதிரால் விகற்பமறச் சாந்தமுறத்
தூயவின்பம் வரக்காந்தச் சுரும்புடையாய் அளித்திலையே
ஓயகிலாச் சீரிடையி லுடையேனுங் காட்டாயோ? 55.

அன்புடைய னாகவெனை யருளகிலாய் அன்பரிடைத்
துன்புடையச் சேர்க்ககிலாய் தூமணியே மோகைநகர்
தன்புடையார் காந்தமலைத் தருவனையாய் மலையெனவே
வன்புடைய பூணணியு மார்பேனுங் காட்டாயோ? 56.

பங்கமுறும் புன்மலத்தே பாவியேன் வீழவுநீ
இங்கடியா னென்றெடுத்தே யின்னருள்செய் யாவிடினும்
மங்குறவழ் காந்தமலை வாழ்ந்தருள்வோய் காந்தளணி
துங்கமுறும் பன்னிரண்டு தோளேனுங் காட்டாயோ? 57.

முமலந்தீர் கின்றவடன் மொய்ம்பிலே னாயிடினும்
அமலுஞ்சேர் காந்தமலை யடைந்துனையே போற்றிநின்றேன்
விமலன்மா தேவன்சேய் வேல்முதலா யுதம்பிடித்த
கமலம்போ லாறிரண்டு கையேனுங் காட்டாயோ? 58.

நீள்கருத்திற் பொய்ப்பொருளே நினைந்தறியா மையிற்றுயரே
ஆள்கின்றே னந்தோ அடியேனுக் கருளாயேல்
மாள்கின்றே னாவேன்நான் வாழ்காந்த மலையாய்நின்
மூள்கதிர்போ லோராறு முகமேனுங் காட்டாயோ? 59.

வையகத்தி லென்போலே வருந்தியவ ருண்டுகொலோ
பொய்யகத்திற் கொண்டுழன்ற புன்மையேற் கருள்கிலையேல்
மையகத்த மழைதவழும் மாக்காந்த மலைவேல
மொய்யரத்த மணிவயங்கு முடியேனுங் காட்டாயோ? 60.

---

ஆர்ந்தவறி யாமையெனு மல்லிரியு மாவருள்செய்
வார்ந்தவடி வேற்கையான் வாழ்கின்ற காந்தமலை
சேர்ந்தவன்றன் கமலம்போற் சிலம்பணியுந் தாளிரண்டும்
சார்ந்துவணங் காதவர்தம் தலையுமொரு தலையாமோ? 61.

பண்டைமுனி வோரகத்துப் பரஞ்சுடராய் நின்றபிரான்
ஒண்டரளக் கோவையணி யும்பர்கோன் மகணாதன்
வண்டுமுரல் காந்தமலை வாழ்குமரன் றன்கோலம்
கண்டின்பந் துய்க்காதார் கண்ணுமோர் கண்ணாமோ? 62.

கூப்பிட் டலறியவக் கூட்ட வமரரெலாம்
பாப்பிட்ட மதியென்னப் படருறுதல் நீங்கவெமைக்
காப்பிட்ட வேலாற்சூர் மருங்கறுத்த காந்தமலை
யாப்பிட்டான் சீரறையா வவ்வாயும் வாயாமோ? 63.

சுளித்துவரு சூர்மார்புஞ் சூர்க்குன்ற மொருங்கறுத்து
வெளித்திகழும் வென்வேலான் விண்வீழுங் காந்தமலைத்
தளித்திகழும் கந்தபிரான் றன்சீரை மிகக்கேட்டுக்
களித்துருக மாட்டாதார் காதுகளுங் காதாமோ? 64.

வீறிட்ட பன்னிரண்டு வியன்றோளான் மயிற்கொடியும்
சீறிட்ட வாரணமாஞ் செங்கொடியுந் தானுடையான்
சாறிட்ட காந்தமலை சார்ந்தவனைக் கண்டுதிரு
நீறிட்டுக் களியாத நீணுதலு நுதலாமோ? 65.

வேதமுடி மீதுமன்பர் மெய்யார் மனத்தகத்தும்
கோதகலுங் காந்தமலைக் கோயிலிலும் வீற்றிருக்கும்
நாதனடி யேபரவி நண்ணியவன் றிருமுன்னர்க்
காதலொடுங் குவியாத கரங்களுநற் கரமாமோ? 66.

புரத்தையன்று நீறிட்டான் புதல்வனெமை யாளுடையான்
சிரத்தையொடும் பூசைசெய்வார் சித்தமக லாதிருப்பான்
வரத்தையருள் வான்காந்த மாமலையில் மேவுசின
கரத்தைவலஞ் செய்யாத காலுமோர் காலாமோ? 67.

கடைந்தகட லிருந்துநஞ்சு கனன்றுவர லறிந்தினைந்தே
அடைந்தவம ரர்க்கென்றன் றாலமுண்டான் றிருப்புதல்வன்
குடைந்துமலர் வண்டுபாய் கோக்காந்த மலையானை
அடைந்துவிழுந் திறைஞ்சாத வாக்கையுமோராக்கையோ? 68.

அறந்திருந்த வருள்சுரக்கு மாறுமுகன் தாமரையின்
திறந்திருந்து திருவடியிற் சிலம்பொலிக்க மலையாடிப்
பறந்திருந்த மயில்வருவான் பயில்காந்த மலையானை
மறந்திருந்து பவஞ்சுமக்கு மனமுமோர் மனமாமோ? 69.

ஏனுறுமோங் காரவொளி யின்மிளிரும் பரஞ்சுடரோன்
நீணிலைய தருவடரும் காந்தமலை நின்றருள்வான்
தாணிழலே தஞ்சமெனச் சார்ந்தவன்றன் திருத்தொண்டே
பேணிமகி ழாமனிதப் பிறப்புமோர் பிறப்பாமோ? 70.

---

பொய்யாம் பிறவிப் புதலிற் புகுந்துழன்று
நையா வருந்தி நலமுறவோர் வழியறியா
தையோ யினியார்கொ லாண்டருள்வா ரெனநின்றேன்
செய்யாருங் காந்தமலைச் சேயே அடைக்கலமே. 71.

உடன்மிகுத்த பிணிவருத்த உய்யும்வழி காணாதே
கடலெனப்பல் பவப்பரப்பிற் கவிழ்ந்துவிழுந் தரற்றுகின்றேன்
மிடலிருக்குங் காலனுக்கு மிகவஞ்சி வந்தடைந்தேன்
மடலிருக்கு மலர்க்காந்த மலையாய் அடைக்கலமே. 72.

பண்ணாத பாவப் பகுதியெலா நன்கியற்றி
நண்ணாத நலமுடையே னுயேன்மற் றினியென்னோ
எண்ணாது செய்ததற்கோர் தீர்வென் றிரங்குகின்றேன்
விண்ணோர்சூழ் காந்தமலை வேலா அடைக்கலமே. 73.

என்றேனு மோனத் திருந்துள்ளே நின்னுருவைக்
குன்றாத அன்பிற் குறித்தறியே னினியெனக்கே
ஒன்றாத இன்பமெவ்வா றுறுமென்றே யேங்கிநின்றேன்
என்றாதாய் காந்தமலை யீசா அடைக்கலமே? 74.

நீல மயிலை நினைத்தறியேன் செவ்வேலைக்
கோலத் திருவுருவைக் குறித்தறியே னுயவெனக்
கேலத் திருவடிநீ யெவ்வா றளித்திடுவாய்
சீலத்தாய் காந்தமலைச் செல்வா அடைக்கலமே. 75.

தம்முண் மயங்கித் தடுமாறும் பிறர்குழுவிற்
சும்மையுறச் சேர்ந்துவெறுஞ் சோம்பேறி யெனநின்றேன்
அம்மையெனக் காநரகம் யாதோவென் றஞ்சுகின்றேன்
கம்மலியுங் காந்தமலைக் கந்தா அடைக்கலமே. 76.

இன்றேனும் பாலு மெடுத்தபிடே கஞ்செய்து
நின்றேனும் தியானத்தே நேர்ந்தேனும் நினக்கண்மை
சென்றேனும் நில்லாத சீத்தையே னஞ்சுகின்றேன்
குன்றுச்சீர்க் காந்தமலைக் கோவே அடைக்கலமே. 77.

நாளையியற் றுவமென்றே நாளெல்லாம் போக்கிவிட்டேன்
நீளவிடும் பாச நெகிழ்த்தகரத் தான்காலன்
மூளவருங் காலாரே முன்னுறுவா ரெனநைந்தேன்
காளமுகிற் காந்தமலைக் கண்ணே யடைக்கலமே. 78.

குற்றம் பலசெய்தேன் கூறுடைய பல்பவமும்
பெற்றும் பிறந்துழலப் பெற்றும் நினைமறக்க
லுற்றும் பலதுயர்க ளுற்றும் வருந்துகின்றேன்
நற்றவர்சூழ் காந்தமலை நாதா அடைக்கலமே. 79.

பாத கமலம் நினையாத பாவியேன்
ஈதினியா னுய்கின்ற வோரார் வழியென்றே
ஓதுபவ ரைக்காணே னுள்ளே துணுக்குற்றேன்
கோதில்வளக் காந்தமலைக் குமரா அடைக்கலமே. 80.

---

மாலை மலர்ந்து மறுநாளிற் சாம்பிவிழும்
சோலை மலர்த்தேனைத் துய்க்கக் கருதாதே
ஞால மழிந்திடினும் நலிவிலின்பந் தந்தருளும்
காலுடையான் காந்தமலை கண்டோய் கோத்தும்பீ. 81.

மென்னுவிற் கேசுவைக்கும் தேனை விரும்பாதே
அன்னையென் னப்பாவென் றங்குருகி நிற்பவர்தம்
நன்னுவும் என்பும் நலவுடனு மினிக்கவைக்கும்
மன்னுளுங் காந்தமலை வந்தூதாய் கோத்தும்பீ. 82.

பறப்பதுவே நெறியாகி வாழ்க்கையெலாம் பாழாக்கிச்
சிறப்பதின்றி வாளா திரியாதே பேரின்பத்
துறப்பதிக்கும் வேலன் உயரருளை நினைந்தவன்வாழ்
பிறப்பறுக்கும் காந்தமலை பேர்ந்தூதாய் கோத்தும்பீ. 83.

நீதிரியுந் தொழிற்கெல்லாம் நெட்டுயிர்த்து மோயினணி
யேதிரிந்து வாடுமலர் தம்மை யிலக்காக்கா
தாதரவோ டண்முவார்க் கானந்தத் தேன்பொழியுந்
தாதையனுன் காந்தமலை சார்ந்தூதாய் கோத்தும்பீ. 84.

யாழனைய வின்னிசையை யார்க்கும் பயன்படுத்தா
தேழையைப்போற் பாடி யிரும்பொழிலிற் றிரியாதே
வாழவரு ளெனவந்து வணங்குவார்க் கெளியகுகன்
வேழமுடைக் காந்தமலை மேயூதாய் கோத்தும்பீ. 85.

வாழ்க்கையெலாம் பாழாக்கி மலரிற் புளித்தமது
தாழ்க்கையெனக் கண்டுமுண்டு தருக்கித் திரியாதே
பூழ்க்கையுடைக் கணபதிபின் போந்த முருகபிரான்
காழ்க்கையுறு காந்தமலை கண்டூதாய் கோத்தும்பீ. 86.

புட்குளறு காலுடைய பொற்பிருந்தும் அந்தோநீ
கட்குடிய னுகிக் கருத்தழிந்து மாளாதே
விட்குடியார் தமக்கிடரை வீயவருள் நற்கருணைக்
குட்குடியான் காந்தமலை யுற்றூதாய் கோத்தும்பீ. 87

காமனுக்கே வின்னுணுய்க் கடிமலரம் பைவிடுத்த
தீமதிப்பும் பாவமும் தீர நினைக்குதியேல்
சேமமுற்றுத் தன்னடியார் சேர வருள்முருகன்
வாமமுற்ற காந்தமலை வந்தூதாய் கோத்தும்பீ. 88.

கடவுளர்க்கா வைத்த கடிமலரை யெச்சிலாப்
படவியற்றி நீசெய்த பாவமெலாம் தீரவெனின்
நடமியற்று மீசற்கே நன்மொழியொன் றையுரைத்தான்
தடமுகத்தான் காந்தமலை சார்ந்தூதாய் கோத்தும்பீ. 89.

மேனி கரியையே யென்றாலும் மேதினியோர்
ஆன வகமு மடர்கரிய விருளாயென்
றேநவிலா வாறுநீ எம்மான் முருகவேள்
தானமருங் காந்தமலை சார்ந்தூதாய் கோத்தும்பீ. 90.

---

வேலார்ந்த கையுடையாய் விமலாவோ சான்றுண்மை
தோலாத நாவுடையோர் சொன்மாலை பூண்டபுய
மாலார்ந்த நாயேனை மாப்புகழ்சேர் காந்தமலைப்
பாலே வலஞ்செய்யப் பணித்திட்டா லாகாதோ ? 91.

கும்பமுனி கேட்கக் குளிர்முத் தமிழுரைத்த
எம்பெருமான் காந்தமலை யீசா பிணிமுகமாம்
வெம்புமத யானையாய் வீணனேன் நினைவாழ்த்தப்
பம்புமருட் கண்கொண்டு பார்த்திட்டா லாகாதோ? 92.

வேதா கமத்துக்கு மேற்பொருளே மெய்யுணர்ந்தார்
போதா மலக்கருத்திற் பொற்சுடரே வோங்கார
நாதா வளர்காந்த நன்மலையப் பாவடியேற்
காதார மாவருணீ யளித்திட்டா லாகாதோ? 93.

கங்கைமக னேயுமையாள் காதற் புதல்வருக
சங்கரனார் தம்பால தாழ்வில்லாக் காந்தமலை
தங்குதண்ட பாணீ தவித்துருகு நாயேனை
இங்கடியா னென்றன்பா லேற்றிட்டா லாகாதோ? 94.

ஆதிமனு வாமஞ்ஞை யாய பரிபுடையாய்
சீதமலர் போன்றுறு செம்முகத்தாய் காந்தமலை
மீதமரும் வள்ளால் விரைந்தடியேன் பழங்கண்ணைக்
காதவருள் தந்துகரங் காட்டினு லாகாதோ? 95.

குன்றுருவ வேல்வாங்கும் கொற்றவனே நற்றவத்தார்க்
கென்றுமழி யாதசுக மீந்தருளுங் காந்தமலை
நின்றருளும் சேயே நினையாத பொய்யனேற்
குன்றிருவார் சீரடியி னுருக்காட்டி லாகாதோ? 96.

வேழம் பிடிக்கு விளங்கனியைப் பறித்தூட்டிப்
பாழி யிருக்கும் பசும்புனலை யேயருத்தி
வாழும் வளக்காந்த மாமலையாய் நாயேனை
ஆழருளிற் சற்றே அழுத்திவைத்தா லாகாதோ? 97.

வேதாவைச் சிறைவைத்த வித்தகனே காந்தமலை
நாதா குறவள்ளி நாயகனே நினையண்மி
நீதான் புகலென்று நேர்ந்தேனைப் பார்த்திரங்கிப்
போதார் அடிசூட்டிப் போற்றுத லாகாதோ? 98.

உமையாள் விழிமணியே ஓங்காரத் துட்பொருளே
அமையாத சீருடைத்த வங்காந்த மாமலையாய்
எமையா தரஞ்செய்தா னென்றே நினைந்தடியேன்
சுமையாம் பவப்பிழம்பைத் தூற்றிவிட லாகாதோ? 99.

வாழ்கநின தருணலங்கள் வாழ்கமுக மூவிரண்டும்
வாழ்கநின நாமமென வாழ்த்துவார்க் கேயருள்செய்
தாழ்கரத்தாய் காந்தமலைத் தந்தா யெளியேனைத்
தாழ்கரும வினைமிடியிற் றூங்குதலு மாகாதோ? 100.

---

### எழுசீர்க் கழிநெடிலடி பாசிரிய விருத்தம்.

திருவளர் செய்ய தாமரை புரைநின்
சீறடி யெளியனேன் மலஞ்சார்
உருவுறு மனமாம் சேற்றிடை முளைக்க
உரிமைகொண் டிடுதல்செய் யாவோ
கருவளர் பிறப்பைக் கடிந்தெமைக காக்கக்
கரத்தினிற் கதிர்கெழு சீர்த்திக்
குருமணி வேல்கொள் காந்தமா மலைவாழ்
குமரனே யமரநா யகனே. 101.

பிறப்பினிற் பயின்று பலபவஞ் செய்த
பெருமையான் பெற்றவ னுதல்
சிறப்புறு நீயும் அறிகுவை கொல்லோ
செவ்விள நீரெலாம் கண்டு
மறப்பறி தாய குறத்தியர் தனமா
மனத்தினி னினைத்தெறி யாத
குறப்பழங் குடிசூழ் காந்தமா மலைவாழ்
குமரனே யமரநா யகனே. 102.

கல்லையுந் துளைத்துக் கடலையும் குடித்த
கதிர்மணி வேலென்றன் னெஞ்சக்
கல்லையுந் துளைத்துப் பிறவியாங் கடலைக்
களித்துண வெண்ணங்கொள் ளாதோ

கொல்லையம் படப்பைக் குமரர்கள் வேடர்
குளிர்மது வாக்கவுண் டவர்க்கே
கொல்லையிற் பாலீ காந்தமா மலைவாழ்
குமரனே யமரநா யகனே. 103.

மலையெலாங் கோயில் கொண்டனை யிரும்பு
மலையெனு மெளியனேன் மனத்துச்
சிலையினிற் கோயில் கொள்ளுதல் நினக்குத்
திருவுள மின்றுகொல் அறல்சேர்ந்
தலைதவழ் சிறுகான் யாற்றினின் மரவம்
அலருகுத் திடத்திரைக் கையால்
குலைபெற வீசுங் காந்தமா மலைவாழ்
குமரனே யமரநா யகனே. 104.

வேடர்தம் மிடையே பொருந்திய வள்ளி
விமலையைப் பொருந்தினை புலமாம்
வேடர்தம் மிடையே பொருந்திய மனத்தை
விதியுற நீபொருந் தாயோ
கூடுறும் யானை மாதவர்க்கினிய தொண்டுசெய்
குணமிக மேவக்
கூடுறு மணிசால் காந்தமா மலைவாழ்
குமரனே யமரநா யகனே. 105.

இந்திரன் முதலோர் இழந்த தந்நிலையே
யெய்திட வருள்செய்த நீமற்
றந்தமில் வினையை யகற்றியென் பழைய
அறிவுறு நிலையரு ளாயோ

செந்தமிழ் மணக்கு நாவலர் தங்கள்
செய்யுளுக் கழகுசெய் கின்ற
கொந்துறு சோலைக் காந்தமா மலைவாழ்
குமரனே யமரநா யகனே. 106.

யானையைக்காட்டி மான்றரு பிடியைப் பிடித்தனை
யென்பரால் எளியேன்
மானுறு வகைநின் பிணிமுகங் காட்டி
மனத்தினைப் பிடித்தல்செய் யாயோ
தேனினை யொழுக விட்டிடும் வெள்ளைச்
செறியிறல் திங்களைப் புரையும்
கோனிலாம் சோலைக் காந்தமா மலைவாழ்
குமரனே யமரநா யகனே. 107.

சரவணப் பொய்கைச் செய்யதா மரையிற்
றவழ்ந்தின்பங் கண்டநீ யென்றன்
கரவணப் பெருத்த மனமெனும் வெள்ளைக்
கமலத்தி லிருந்திடாய் கொல்லோ
அரவினைப் பொருவும் வண்டொழுங் கிருலா
மம்மதி யைத்தொடர்ந் திசைக்கும்
குரவுசூழ் சோலைக் காந்தமா மலைவாழ்
குமரனே யமரநா யகனே. 108.

தந்தையை யேவும் தனயனீ யென்று
தமியனே னறிந்தன னாதல்
எந்தைநின் றன்னை யெனக்கருள் செய்ய
எழுந்திரு வென்றுரைக் கின்றேன்

பந்தமும் பாவும் சீருற வமைக்கும்
　　பண்புறு நூற்றொழில் பயில்செங்
குந்தர்நின் றேத்துங் காந்தமா மலைவாழ்
　　குமரனே யமரநா யகனே. 109.

கடலிடை மரத்தைத் தடிந்தனை யென்பர்
　　கலங்கிய பவக்கடற் குள்ளே
அடலுடை மரமா யிரும்பென வமைந்த
　　வடியனேன் மனந்தடி யாயோ
கடமிசை முளைத்துக் கடனுகர் முனிவன்
　　கைதொழும் முருகவே ளேகுக்
குடமுயர் கொடியாய் காந்தமா மலைவாழ்
　　குமரனே யமரநா யகனே. 110.

சரியையா னறியே னங்கைமார் மலர்க்கைச்
　　சரியையே யறிந்திடு வேன்மெய்க்
கிரியையா னறியே னவர்தன விணையாங்
　　கிரியையே யறிந்துழல் வேனே
அரியைவா ரணங்க ளமையொடும் பொருந்தி
　　யன்புசெய் யதிசயம் தானங்
குரிவிரி புகழ்சேர் காந்தமா மலைவாழ்
　　குமரனே யமரநா யகனே. 111.

உலகெலாம் புகழும் பெரியவ னீயென்
　　றுணர்வுற வரற்குரை பகர்ந்தும்
விலகலாம் படியா காதுவே டர்தம்
　　மின்னைநீ வணங்கிய தென்னே

பலகலாம் விளைக்கும் புலன்வழிச் செல்லாப்
பண்ணவர் உண்ணிறைந் தோங்கும்
குலகலா விளக்கே காந்தமா மலைவாழ்
குமரனே யமரநா யகனே. 112.

முன்னநீ யன்று முளரியந் தடத்து
முனிவர வந்தனை முளரி
தன்னில்வந் தவனைத் தகைந்தனை யிதுவோ
தகவுனக் காகுவ தையா
செந்நெலுங் கரும்பும் புடைதெரி யாது
செழித்திடும் பணைகள்சூழ் மோகைக்
கொன்னவில் குவட்டுக் காந்தமா மலைவாழ்
குமரனே யமரநா யகனே. 113.

மான்றரு மகளை வேங்கையா நின்று
வரைந்தனை யென்பது மென்னோ
ஊன்றரு முடலை விரும்பலார்க் குள்ளா
யென்பது மென்கொலோ கொந்திற்
றேன்றரு மருவி யார்ந்திள மந்தி
தியானமே செய்துவீற் றிருக்குங்
கூன்றரு பிறைசார் காந்தமா மலைவாழ்
குமரனே யமரநா யகனே. 114.

சிலையெலாங் கோயில் கொண்டனை நெஞ்சச்
சிலையினிற் கோயில்கொள் ளாயோ
அலைதரு தமஞ்சா ரவுணனை மயிலா
யாக்கினை யடியனேன் றமத்தைத்

தொலைதரச் செய்வித் தருளுதல் பெரிதோ
தோன்றிய வேங்கையைப் புலியென்
றுலைதருங் களிறு கரந்திடுங் காந்த
வோங்கலிற் குமரநா யகனே. 115.

சூரெனுங் கொடியற் கொடியனுச் செய்த
சுப்பிர மணியனே யோதி
காரெனும் வேடக் குமரியைக் கிழவி
யாக்கினை காந்தமா மலையோய்
பாரெனும் பௌவப் பவப்பெருந் திரையிற்
படருறும் எளியனே னெஞ்சைச்
சீரெனும் படிநின் றிருவடிப் பீடம்
செய்தருள் புரிந்திடு வாயே. 116.

ஒன்றினை வேண்டி யிரந்திடு கின்றேன்
உரிமையோ டருள்செய்ய வேண்டும்
நின்றனல் லடியார் குழுவினை யன்றி
நேயமோ டணுகிடா வியல்பும்
கன்றிய சிந்தை யுடன்பிறர் குறைகள்
கழறிடா வன்மையு மளிப்பாய்
மன்றினே சிறக்கும் பொருட்கொரு பொருளே
வளர்தருங் காந்தவோங் கலனே. 117.

உண்டியை விழைந்தும் உடையினை விழைந்தும்
உழந்ததுன் புற்றுமெற் குறுகி
மண்டிய உதவி புரியுமா வேண்டும்
மனிதரைக் காணுங்கால் நீயே

அண்டியென் னெஞ்சின் நிலையறி தற்கே
அடைந்தனை யெனநினைக் கின்றேன்
விண்டிடு புகழ்சேர் காந்தமா மலையில்
விமலனே குமரநா யகனே. 118.

வெருளியி னொருவர் விஞ்சியென் பாலே
மிடுக்குறு செயல்புரிந் தனரேல்
தருதியி லெளியேன் றனையருள் கொண்டு
சார்ந்துசோ தித்திடு மாறே
விருதிசேர் குணத்து விளங்கினை யென்றே
மிகநினைந் துருகுகின் றேனல்
பருதியொன் றின்றிப் பூரண மாய
பாங்கனே காந்தவோங் கலனே. 119.

தாயறியாத சூலிலை யென்ற
தகைமையை யானறி யாதேன்
நீயறி யாத செயலிலை யென்னும்
நினைவினை யெட்டுணை யறியேன்
பேயறி யாத வினைபுரி கின்றேன்
பித்தனேற் கருளுமா றுளதோ
நோயறி யாத அன்பர்சூழ் காந்த
மலையினி னுறைமணி விளக்கே. 120.

தந்தையுந் தாயும் நீயென அறிந்தும்
தனயனா னெனநினைந் திடற்கென்
புந்தியச் சுறுதல் என்கொலோ புழுத்த
நாயினும் புல்லியேன் சூழ்ந்த

இந்தியச் செருவுட் டலைதடு மாறி
இருந்திடும் இந்நிலை நீக்காய்
விந்தையார் காந்த மலைமிசை யொளிரும்
வேலனே நீலமஞ் ஞையனே. 121.

அன்றுநீ கமலப் பாயலிற் றுயின்று
யாதியே லடியனேன் மனமாம்
கன்றிய வெள்ளை மலரினிற் றிருத்தாள்
பதித்திடக் கருணைகொள் ளாயோ
குன்றெலாங் காணி கொண்டினி தாடுங்
குமரனே காந்தமா மலையாய்
என்றினிக் காண்பேன் என்றினி யுன்றோ
டியைவனென் றினைந்துவாழ் குவனே. 122.

தோடியை மலரா லருச்சனை புரியேன்
சுருட்டியை யிலையுநா னீயேன்
வாடிய வங்க மாசுநீங் கில்லேன்
வளர்கலி யாணிலை யுற்றேன்
நாடிய நின்மோ கனந்தரு தாளின்
நாருறு நாளுமொன் றுளதோ
கூடிய குறிஞ்சி நாயக காந்தக்
குன்றினி லொன்றிய விளக்கே. 123.

மாயையாஞ் சேற்றி லழுந்திய மனமாம்
வண்ணமில் தாமரை யதன்மேல்
பாயநின் பாத தாமரை யொன்றும்
படியெனக் கருளுநா ளுளதோ

வாயநின் பாடல் கருத்தி னின்றியானம்
வலஞ்செயல் நின்றிருக் கோயில்
ஆயநின் பணியே பணியென்பார் சூழும்
அழகுறு காந்தவோங் கலனே. 124.

## எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

திருமாலு மயனுமரன் றானு மாகும்
தெய்வமெமை யாட்கொள்ளும் முருகன்கண்டாய்
பெருமாலை யறவொழிக்கும் பெரியோன் கண்டாய்
பிடலைவு மாறுமுக வள்ளல் கண்டாய்
ஒருமாலை மதிமுடித்தோ னிளஞ்சேய் கண்டாய்
ஓமெனுநற் பொருளாகி நின்றான் கண்டாய்
கருமாலை கெடக்காக்கும் கடவுள் கண்டாய்
காந்தமலை வாழ்ந்தகதிர் வேலன் றானே. 125.

நினைத்தவர்க்கின் னமுதாகி நின்றான் கண்டாய்
நேரியநற் சமயமெல்லாந் தொழுவான் கண்டாய்
தினைப்புனத்தில் வளர்வள்ளி கணவன் கண்டாய்
தேவரிறை மகட்கினிய காந்தன் கண்டாய்
வினைப்பயனை யூட்டுவிக்குந் தாதை கண்டாய்
வேதாந்த மீதிலுறை பாதன் கண்டாய்
கனைத்துலவு முகில்சூழும் பொழில்சேர் மோகைக்
காந்தமலை வாழ்ந்தகதிர் வேலன் றானே. 126.

எவ்வுயிர்க்கு மொருதாயாய் நின்றான் கண்டாய்
ஏகாந்த மோனவொளி விரிப்பான் கண்டாய்
தெவ்வர்கெட வமரர்பயந் தீர்த்தான் கண்டாய்
திருமுருக னெனும்பெரிய பெயரான் கண்டாய்

இவ்வுலகின் மலையெல்லா மிருப்பான் கண்டாய்
இறைவனுக்கோ ருரைதந்த வாசான் கண்டாய்
கவ்வையுடை முகில்புடைசூழ் சோலை மோகைக்
காந்தமலை வாழ்ந்தகதிர் வேலன் றானே. 127.

மலக்குவிய லிருந்தெடுத்தே யன்பர் தம்மை
மாளாத வாழ்வருளிப் புரப்பான் கண்டாய்
நலக்குமுரு வெழிலிளமை யெந்த நாளும்
நலியாத பேருருவம் பூண்டான் கண்டாய்
நிலக்கணியாங் குறிஞ்சிநிலத் தலைவன் கண்டாய்
நீடமரர் தலைகாத்த வள்ளல் கண்டாய்
கலக்கமிலா நீர்வளஞ்சூழ் செல்வ மோகைக்
காந்தமலை வாழ்ந்தகதிர் வேலன் றானே. 128.

மூவுலகும் போற்றிசெயும் முதல்வன் கண்டாய்
முத்திநிலை யருளுமொரு வள்ளல் கண்டாய்
தாவுமயில் மீதுலவு தருமன் கண்டாய்
சாருமுடற் பிறவிக்கு மருந்து கண்டாய்
ஓவுதலில் பெருங்கருணை யுடையான் கண்டாய்
உயர்சகசா நந்தநிலை தருவோன் கண்டாய்
காவினுயர் மந்தியினங் களித்துச் சூழும்
காந்தமலை வாழ்ந்தகதிர் வேலன் றானே. 129.

---

பன்னிரண்டு கரமுடையாய் போற்றி போற்றி
பரிதியென மயிலிவர்வாய் போற்றி போற்றி
துன்னிரண்டு கண்மணியே போற்றி போற்றி
துங்கமனத் தோர்க்கமுதே போற்றி போற்றி

மன்னிரண்டு வினையொழிப்பாய் போற்றி போற்றி
வள்ளியிணை நகிற்புணர்வாய் போற்றி போற்றி
கன்னிவந்து மயில்பயிலும் பொழில்சேர் மோகைக்
காந்தமலை யுடையானே போற்றி போற்றி. 130.

மறையறியாத் தாளுடைய மன்னு போற்றி
மலரோனைச் சிறையிருத்த வல்லாய் போற்றி
அறைவரிய புகழுடைய வையா போற்றி
ஆறுமுகங் கொண்டருளு மப்பா போற்றி
குறைவரிய பெருங்கருணை யுடையாய் போற்றி
குத்திரத்தைத் துளைத்தவயிற் கோவே போற்றி
கறையில்புகழ் வளர்மோக னூரின் மேவுங்
காந்தமலை யுடையானே போற்றி போற்றி. 131.

மாலுடைய மருமகனும் வாழ்வே போற்றி
மாற்றலர்கள் கூற்றமெனும் வேலா போற்றி
தாலுடைய புலவர்புக ழணிவாய் போற்றி
தஞ்சமடைந் தார்ப்புரக்குந் தயையாய் போற்றி
நீலுடைய மயிலிவர்ந்து வருவோய் போற்றி
நிறைந்தெங்கு மிலங்குபரம் பொருளே போற்றி
காலுடைய தண்டையணி குமரா போற்றி
காந்தமலை யுடையானே போற்றி போற்றி. 132.

மடலாகி மலராகி வாழ்வாய் போற்றி
மணமாகி மென்மையாய் வருவாய் போற்றி
அடலாகி யாண்மையா யமைந்தாய் போற்றி
ஆரணமா யாகமமாய் அவிர்ந்தாய் போற்றி

உடலாகி உயிராகி யுறைவாய் போற்றி
உள்ளமா யுணர்வாகி யுள்ளாய் போற்றி
கடலாகி நிலமாகிக் களித்தாய் போற்றி
காந்தமலை யுடையானே போற்றி போற்றி. 133.

ஒருபொருளா நின்றபெரு முதலே போற்றி
ஓரிரண்டு தேவியரை யுவந்தாய் போற்றி
வருமொருமூ வுலகாகி வளர்வாய் போற்றி
மாமறைநான் காகிவளர் மன்னு போற்றி
மருவுவலிப் பூதமைந்தாய் மலிந்தாய் போற்றி
வாகுடைய கலையாறும் வாய்த்தாய் போற்றி
கருவுயிர்சூ ழேழுலகங் காத்தாய் போற்றி
காந்தமலை யுடையானே போற்றி போற்றி. 134

திருமுருகா நின்னுடைய பாதம் போற்றி
சீர்க்கடம்பா நின்னுடைய சிலம்பு போற்றி
பெருகருளோய் நினதுதிரு விடையே போற்றி
பிஞ்ஞகன்சேய் நினதுதிருக் கரங்கள் போற்றி
உடுகன்பர் போற்றுநின்றன் கைவேல் போற்றி
ஓராறு மாமுகங்கள் போற்றி போற்றி
தருகருணை நிதியேநின் முடிகள் போற்றி
சற்குருவே காந்தமலை போற்றி போற்றி. 135.

ஐயாவென் னத்தாவென் னப்பா போற்றி
அன்னையென் னன்பேயென் னருளே போற்றி
மெய்யாமென் னுயிரேயென் னுளமே போற்றி
வேதமே வேதியனே விகிர்தா போற்றி

பொய்யாத நாவுடையார் பொருளே போற்றி
பூவேயப் பூமணமே எழிலே போற்றி
கையாத வாழ்வுதரு நிதியே போற்றி
காந்தமலைத் திருமுருகா போற்றி போற்றி. 136.

ஆனந்த வாழ்வுதவு மண்ணல் போற்றி
அடியார்க்கே எளியநல மணியே போற்றி
மோனந்த வாததவர் முதலே போற்றி
முதுகாட்டி லாடுவார் மகனே போற்றி
தானந்த மில்லாத தனியே போற்றி
சாற்றரிய நெறிக்கிலக்காந் தருவே போற்றி
கானந்த வழுமினிமை யானைய் போற்றி
காந்தமலை யார்ந்தகுக போற்றி போற்றி. 137.

---

எனக்கினித்த சுவைக்கரும்பே கனியே தேனே
இன்னமுதே பாற்சுவையே மணியே என்றும்
மனக்கினித்த பொருளருளி வாழ வைக்கும்
மாதருவே வானோர்கள் தேவே யாண்டும்
பிணிக்களித்த பெருமானே சிறுமா னேந்தும்
பெம்மாற்கோர் குருவாகு மம்மா னேயக்
கனக்கமழும் பொழில்மலர்கள் மணத்தை வீசும்
காந்தமலை முருகாநின் னபயம் நானே. 138.

ஓங்காரத் துள்ளொளிக்கு ளுருவே மோன
உயர்நிலையி லூற்றெடுக்கு மமுதே ஞானப்
பாங்காரப் பதத்தினிலே தோன்றும் பாகே
பத்திநெறி முற்றிநிற்கப் பழுக்குந் தேனே

ஏங்காத வண்ணமெனைத் தொழும்பு பூண்டிங்
கெளியேமுக் கெளிவந்த தாயே சீர்த்தி
தேங்காத ரவுமிகுந்த யாரும் போற்றும்
சீர்க்காந்த மலையாய்நின் னபயம் நானே. 139.

---

ஞானமெனுந் தேசுடைய சூரி யன்காண்
நலிபிறவிப் பெருங்கடற்கோர் நாவா யன்காண்
மோனமெனுங் கோயிலுறை மூர்த்தி யான்காண்
மும்மலமாங் காடுசுடு வேடு வன்காண்
தானமுறு கரியகந்தை தனையே சாடத்
தகுகருவி யுடையதொரு பாகன் றான்காண்
கானமலி புகழ்பாடி யாடு வார்சூழ்
காந்தமலை யானவனென் கண்ணு ளானே. 140.

ஓயாத பெரும்பவத்தை யொழிக்க வெண்ணி
உற்றிருந்தால் உள்ளமுத மூற்று வான்காண்
தோயாத அருட்கடலிற் றிளைய மாடுந்
தூயவர்க்கே நேயமலி துணைவன் றான்காண்
பாயாத பெரும்புனலே போல நின்ற
பக்குவமார் மனத்தினர்க்குப் பழுத்த வன்காண்
காயாத சாந்தநிலை யுச்சி யான்காண்
காந்தமலை யானவனென் கண்ணுளானே. 141.

---

மூவிரண்டா மாதாரந் தம்முள் ஓடும்
மூச்சியக்கி யோகவலி காட்டு வார்க்கங்
கோவிலிடை யூறறுத்தோர் சோதி காட்டி
உயர்நிலையிற் பேரின்ப வமுதை யூட்டித்

தாவுபல மலத்தடையை யறவேயோட்டித்
தழுவுநல நிலையருளிப் புரந்து நிற்கும்
காவுபல சூழ்ந்துமணங் கவினு மோகைக்
காந்தமலை முருகனிரு கமலத் தாளே. 142.

இரவினிலும் பகலினிலும் வழிநடக்கும்
இடத்தினிலும் வீட்டினிலும் காட்டின் கண்ணும்
பரவுமெந்தப் பொழுதினிலும் வைத போதும்
படுத்திருக்கும் பொழுதுமிருந் திடினு மன்பர்க்
குரவுதவி யாதருளே தந்து காத்தங்
குற்றபல வின்புதவி ஒளிரா நிற்கும்
கரவுதவிர் நெஞ்சகத்தார் பரவிச் சூழும்
காந்தமலை முருகனிரு கமலத் தாளே. 143.

பெருங்கடலிற் சூரியன்வந் தணைந்த தென்னப்
பிறங்குமயின் முதுகினிடை யொளியே வீசும்
கருங்கடலிற் புணையெனவே பிறப்பைப் போக்கும்
கமலமென மலர்ந்தழகு கவினித் தோன்றும்
பெருங்கடமை யியற்றுமன்பர் புந்திக் குள்ளே
பிரசமென வூற்றெடுக்கும் பொழில்க ளெல்லாம்
கருங்கவிஞல் வானளந்து திருமா லேய்க்குங்
காந்தமலை முருகனிரு கமலத் தாளே. 144.

---

ஒன்றுமகந் திரண்டுவரு மன்பி னோர்கள்
உளமூன்று பெருமானை நாலு கையார்
கன்றின்வழி வந்தவனை யஞ்சா மேயக்
கருங்குன்ற மாறுக வேல்விட் டோனை

மன்றெழுசே வடிபெட்டா மாயன் வேதன்
மலரடியை வணங்குநவ மாய சேயை
இன்றெம்பாற் பத்துடைய வேலோன் றன்னை
எழிற்காந்த மலைமிசையே காண லாமே. 145.

முத்தமிழு முக்கண்ணு விசைந்தார் நெஞ்ச
மூலத்தே யொளிவிளக்கு மணியை வேதத்
தொத்தபொரு ளிஃதெனுமா வறியா தோங்கும்
உத்தமனை யென்னிரண்டு கண்ணை என்றும்
சித்தநிகழ் வெல்லாமு மறிந்தாங் காங்கே
செயல்கூட்டுங் கண்மணியை யுயிரை யந்தோ
அத்தனையென் ஆறுமுகப் பெருமான் றன்னை
அருங்காந்த மலையானை மறத்த லாமே. 146.

வேண்டாமை வேண்டுதல்க ளில்லான் றன்னை
மெய்யன்பர் வேண்டியன விளைப்பான் றன்னைத்
தூண்டாத மணிவிளக்கைச் சொல்லை ஞானச்
சுடரினைச்செம் பொருளான செல்வன் றன்னைப்
பாண்டாமும மொழிவள்ளிக் கிசைந்த கோவைப்
பருமித்த வெண்கரிதன் மகட்குங் கோனை
ஈண்டாத புகழெல்லா மிசைவிப் பானை
எழிற்காந்த மலையானை மறத்த லாமே. 147.

உண்மைநிலை அறிந்தவர்க்கோர் உறுதி யான
உத்தமனை வாரணமேல் உயர்த்தி னானைப்
பெண்மையலி யாண்மையெனப் பிறங்கி னானைப்
பேசாதார் நெஞ்சகத்தோர் தேசா னானை

வண்மைமலி திருக்கரத்து வேலன் றன்னை
வள்ளிபடர் கற்பகத்தை மனத்தே தோன்றும்
திண்மையறி வானனைச் செவ்வே டன்னைச்
சீர்க்காந்த மலையிலங்கக் கண்டேன் நானே. 148.

உள்ளத்தி லேமுருகை யுணர வேண்டின்
உனக்கொன்று சொல்வன்கேள் பேதை நெஞ்சே
கள்ளத்தை யறவொழிப்பாய் காந்தக் குன்றம்
கண்டுவலஞ் செய்திறைஞ்சிக் கோயில் புக்கு
மெள்ளத்தன் னதுதானென் றிருக்குங் கொள்கை
வீசியெறிந் திறைவாவெம் கந்தா ஓலம்
கொள்ளத்தா வென்னையெனக் குறித்து நின்று
கூத்தாடிப் பலபிதற்றிக் கும்பி டாயே. 149.

நான்முகனாய்த் திருமாலாய்ச் சிவனே யாகி
நானிலமாய் நீராகி அங்கி யாகித்
தேன்முகந்த பொழில்வீசுங் காலே யாகிச்
சீர்சான்ற வெளியாகிக் கதிரோ னாகி
வான்முகந்த மதியாகி யாவு மாகி
மாமலையாய் மலைத்தலைமை பூண்டோ னாகி
ஊன்முகந்த பிறவிதவிர் மருந்தே யாகி
உற்றவனைக் காந்தமலை யினிற்கண் டேனே. 150.

ஆறுமுக மாறுமுக மென்பார்க் கங்கே
அஞ்சுமுகந் தீர்த்தருளு மையன் றன்னைக்
கூறுமுகம் யாவுநிலை பெற்றான் றன்னைக்
குஞ்சரியைக் குறமகளைக் கூடி னானை,

ஏறுமுக வீரவேல் கைக்கொண் டானை
எங்கள்குல தெய்வத்தைப் பிழைசெய் தாலும்
தேறுமுகங் காட்டியின்பந் தருவான் றன்னைச்
சீர்க்காந்த மலையினிலே காண லாமே. 151.

மயிலேறி யேழுலகு முழிதர் வானே
வானோர்கள் தொழுதேத்த வளர்கின் றானே
அயிலேறு செங்கரத்திற் றொடிகொள் வானே
அருங்கடம்பைத் தடமார்பி லணிவித் தானே
வெயிலேறு செழும்பவளக் குன்றொப் பானே
விழைந்தார்கட் கின்பமிக விளைவிப் பானே
கயிலேறு சிலம்படியென் மனம்வைப் பானே
காந்தமலை மேவியவெம் முருக னேமே. 152.

ஒன்பதெனும் வாசல்வைத்தோ ரூனை யீட்டி
உள்ளெலும்பு மேற்றோலு மயிரு மேய்ந்து
தின்பதுவு முறங்குவதுஞ் செயலா வைத்துச்
செய்தசிறு கூரையிது கழிதன் முன்னர்
அன்பதுவே அபிடேக நீரா நெஞ்சம்
அலராக உள்ளாவி யமுத மாகக்
கொன்பெருவேற் காந்தமலைக் குமரன் றன்னைக்
குறுகியொரு பூசைசெயக் கூடுங் கொல்லோ. 153.

ஒன்றுனக்குச் சொல்கின்றே னெஞ்ச மேவா
உண்மையிது பொய்யில்லை உலகத் துள்ளே
இன்றிருப்பார் நாளையெங்கே யென்றே யாயின்
எவரழியாத் துணையாவா ரென்ப தோர்தி

மன்றிருப்பார் தமக்கொருசெம் மறையை யோதும்
மாகுருவை வேலவனைக் காந்த மென்னுங்
குன்றிருப்பான் றன்னையன்றி யமனார் வந்து
குறுகுமந்நா ணமக்கொர்துணை உறவர் யாரே.154.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அஞ்சிலே துயரஞ் சற்றும்
ஆறிலை யெழுவா யென்னின்
மஞ்சிவர் காந்தக் குன்றான்
மலர்ப்பத மெட்டாய் நெஞ்சே
துஞ்சிநீ போதி யேல்யான்
தூநவ நாதக் கோழி
விஞ்சிய கொடியா ரன்னோன்
விரைப்பதம் போற்று வேனே. 155.

புகுந்தன காலம் பல்ல
போக்கினேன் வீணே நின்பால்
உகந்துநன் மதிசே ராற்றில்
ஒருங்கிலே னெனினும் வேலன்
சுகந்தரு மென்னு நெஞ்சத்
துணிவுடை யேன்யா னுதல்
அகந்தா வறிந்து காந்த
விலங்கலா யருள்செய் வாயே. 156.

கீரனுக் கருள்செய் தாய்நீ
கிழவனென் றுரைத்தான் யானோ
மாரனுக் கழகை யீயும்
வண்ணமார் குமர னென்றே

தீரநெஞ் சகத்து ளெண்ணிச்
செப்பினை னருள்தி கொல்லோ
வீரவேற் கையாய் காந்த
விலங்கலி லிலங்கு மெந்தாய். 157.

வேறு.

ஒருங்குமர வினுக்குரிய விடமேபோ லாணவத்தில்
உயங்கி மாயை
நெருங்குமரம்போலீர்க்க வருந்துகின்றேன் நெஞ்சகத்தே
நிற்பாய் கொல்லோ
மருங்குமர மடர்சோலை மதுவூற்ற மலர்காந்த
மலையில் நின்ற
பெருங்குமர மறையுமுணர் வருங்குமர ஆறுமுகப்
பெரிய தேவே. 158.

செங்கஞ்ச மனையதிருப் பதமுணரேன் திருவரையைச்
சிந்தி யேன்யான்
அங்கஞ்ச நகில்வள்ளி யணைத்தகர தலம்நினையேன்
அலரில் வாழ்ந்து
தங்கஞ்ச வாகனனைத் தகைந்ததையு நினையேன்நீ
தமியேன் மாட்டே
இங்கஞ்ச லெனவெவ்வா றேகுதியால் காந்தமலை
இருந்த கோவே. 159.

நண்ணுளும் பரிகரிதே ரவையுங்கொண் டமலைந்த
நாளிற் சூரன்
விண்ணுளுந் திறன்கெடுத்தே வேலெறிந்து பிளந்துநறை
மேவு கஞ்சக்

கண்ணுளும் புலோமசையும் மங்கலநாண் தாங்கவருள்
காட்டும் நின்னைப்
பண்ணுளும் பாடியுரு கிடவருள்தி காந்தமலைப்
பரம வாழ்வே. 160.

விரவுமலை யாழியில்வேல் விட்டவனே இந்திரற்கு
வீறு வாழ்வும்
புரவுமலை யாதுறவே வழங்குவள்ளற் பெருமானே
பூத லத்தோர்
பரவுமலை யாங்காந்த கிரிக்கடவுள் நினையெண்ணுப்
பாவி நெஞ்சக்
கரவுமலை வுறமியல்பும் போக்குதியா லினியேனும்
காதல் கூர்ந்தே. 161.

கற்கண்டு மதுரசம்பால் எனஅன்பர்க் கினியையெனக்
கழறல் கேட்டேன்
நிற்கண்டு சுகம்பெறுவார்க் கெந்நாளும் பேரின்பம்
நிலைக்கு மென்பார்
எற்கண்டு மனம்பகையா இருத்தலினல் நினையறியும்
எழுச்சி யில்லேன்
மற்கண்டு ளங்குதிருத் தோளுடையாய் காந்தமலை
வளருங் கோவே. 162.

நலம்பயிலு மோங்காரத் துள்ளொளியா யாதார
நன்பொன் வாயிற்
குலம்பயிலு மாறினுக்கு மீதானத் துயர்பிரம
கோஷ மாகி

இலம்பயிலு மடியார்க்குந் துறவொழுக்க முடையார்க்கும
இனிமை சூழ்ந்த
தலம்பயிலுங் காந்தமலைச் சினகரத்தி லொளிர்முருகன்
தாள்கள் போற்றி. 163.

முன்னாட்டும் பலசமய முடிவெல்லா மொருங்கமரு
மூவாக் கொள்கை
தன்னாட்டும் திருவுருவம் பலவற்றின் தத்துவமாய்ச்
சார்ந்தி யார்க்கும்
எந்நாட்டும் எம்மதத்தும் எப்பதத்தும் அன்புசெய்வார்க்
கிரங்கி யின்ப
நன்னாட்டுப் பெருவாழ்வை யளித்தருள்வான் காந்தமலை
நயந்த கோவே. 164.

## எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

நெஞ்சு வெம்பகை யாகி நின்றது
நின்னை யுன்னவ ராதுகாண்
பஞ்சு போலிடர் பட்டு வாழ்வது
பாவத் தின்பயன் அல்லவோ
உஞ்சு போகவென் றேயெ னக்கருள்
உய்த்திட் டாலது பாவமோ
மஞ்சு சூழ்பொழிற் காந்த மாமலை
வள்ள லேயின்ப வெள்ளமே. 165

வேத மாகம மேய றிந்தில
னேனும் நெஞ்சு விழைந்துனை
நாத னாக மிகத்து ணிந்தனன்
நாயி னேனையு மாள்தியோ

சீத மாமதி சூடி யாறு
தலைக்கி டப்பவுஞ் சிறரா
காத வாவம கேச னேயெனுங்
காந்த மாமலை யெந்தலை. 166.

சோம்ப லேயெனை யுண்டு விட்டது
தூக்க மில்லை துணிவிலை
தேம்பி லேனினை யெண்ணி யித்தனை
சிறுமை யெங்குஞ் சிறந்தில
வாம்ப கைத்திற நெஞ்ச மொன்றென்
வருத்த மித்தனை காண்டியால்
காம்பு சூழ்தரு காந்த மாமலை
காத லித்தரு கேசனே. 167.

## பதினான்குசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

உயிரினுக் குயிரே உடலினுக் குயிர்ப்பே
உளத்தினுக் குரியதோர் விளக்கே
உரையினுக் குணர்வே உணர்வினுக் கின்பே
ஒன்றிய இன்பினிற் குறவே
பயிருநற் குழவிக் கன்னையே போலும்
பண்புடைக் கடவுளே எனக்குப்
பயன்றருந் தருவே பயந்தவிர் துணையே
பலருமென் பாலன்பு காட்டத்
துயரெனை நீங்கத் துளக்கிலா நெஞ்சிற்
றுணிவுறத் தந்தநற் குருவே
சுத்தஞா னத்தின் சோதியே இதயத்
தூமலர் நிறைந்ததோர் வாழ்வே
மயர்வகல் முனிவர்க் குள்ளமு தூறும்
மதியமு தப்பெரும் பிழம்பே

வளர்பொழில் மோகைக் காந்தமா மலையின
மணியனை வணங்குகின்றேனே. 168

## எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஈன்ற தாயினை மகமறந் தாலும்
எழுங்கு ழந்தையை யனைமறந் தாலும்
ஆன்ற வானவர் சுகமறந் தாலும்
அடரு மாமதி கலைமறந் தாலும்
ஏன்ற தீயொரு சுடர்மறந் தாலும்
இசைகொள் தன்மையைப் புனல்மறந் தாலும்
தோன்று காந்தமா மலைவளர் குருந்தைத்
தொழும்ப னேனினி மறக்ககி லேனே. 169

## வேறு.

கண்ணவனைக் காண்கவிரு காதவன்சீர் கேட்க
கருத்தவனை யெண்ணுகவென் வாயவனைப் புகழ்க
நண்ணுமிரு கரமுருகன் றிருப்பூசை செய்க
நாயடியேன் றாள்களவன் காந்தமலை போந்தே
எண்ணுவலஞ் செய்திடுக உடலடீவன் கோயில்
இறைஞ்சிடுக விப்பிறவி யவற்கடிமை யாகப்
பண்ணுமொரு நல்லூழை யவனெனக்கே யருள்க
பணியவன்றன் பணியெனக்கோர்பணியாக வமைக.

## அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

செய்ய தாமரைப் பதங்களுங் குன்றியேய்
செறியுடை யிடையுந்தாழ்
கையி ரண்டறு மைகளுந் திருமலர்க்
கடம்பணி வியன்மார்பும்

ஐயதிண்புய மலைகளும் திருமுக
மாறுநன் மணிமுடியும்
மையல் போக்கிய காந்தமா மலையுமென்
மனத்தைவிட் டகலாவே. 171.

## கட்டளைக் கலித்துறை.

சேரா தவனகை யைபுதிர்த் தார்தரு சேய்துரிசு
சாரா தவனகை யாம்வள்ளி நாயக தாணிதமும்
ஓரா தவனகை யும்வினை யேனுனை யுள்ளகிலேன்
பாரா தவனகை செய்யநிற் பேனைக்கண் பார்த்தருளே. 172.

அருக்கா திருமி வரலென வன்றவ ளுர்நகையின்
உருக்கா தியேயுதிர்த் திட்டோன் குமாரன் உளத்திலன்பு
சுருக்கா திசைபெறு வோர்புகழ் காந்தச் சுடர்மலையான்
இருக்காதி யின்றலை மேவுஞ்செங் தாளனை எண்ணுதுமே.
திருக்காந் தமலை முருகன் றிருவடிச் செம்மலர்க்கே
உருக்காந் தமலைத் திடுகரும் பொன்னென வுள்ளமையக்
கருக்காந் தமலை வினைபோக வேதுதி கட்டுரைப்பன்
திருக்காந் தமலை நீக்கறி யார்களைச் சேகலனே. 173.

காந்த மலைக்குமரேச குறவள்ளி காதலுறும்
காந்த மலைக்குறிக் குந்திருத் தோள கழலடிகள்
காந்த மலைக்கு மனமிரும் பாவதைக் கண்டியிருங்
காந்த மலைக்கும் வினையையென் றோநான் கழலுவதே. 174.

---

தனதன தான தனதன தான
தாந்தன தனன தனதன தானை.

புயல்வளர் சோலை திகழ்வள மோகை
யாந்தல மொளிர்செய் புகழ்மிகுசாமி
பொருதவர் சேனை பொடிபொடியாக
ஏந்திய வயிலை விடுமுருகேசா

மயல்விளை யாது மதியினின் ஞான
மோங்கிய வொளியை படியர்கள்பாலே
மருவுற வேவு மறுமுகநாத
வாஞ்சையின் மயிலி லிவர்தருவீரா
அயலறியாத சுகபரஞான
மார்ந்திடு வழியை மொழியனுகூலா
அழகிய தேவ ரிறைமகள் காடு
வாழ்ந்திடு மயிலை மருவிய சீலா
கயல்விழி வீறு முமைதருபால
காந்த மலையினின் வளர்தரு தேவா
கருதிய யாவு மினிதுறு மாறு
சார்ந்த துயரற வருள்புரிவாயே.

---

தாந்த தனத்தன தானன தானன
தாந்த தனத்தன தானன தானன
தாந்த தனத்தன தானன தானன—தனதான.

தீம்புனல் மிக்குவ ராலேய மேவுபு
சேண்படரிக்கு விராவா நிலாவிய
தேங்கழ னிக்குள ருதாரு மாவள மிகவேசெய்

சேர்ந்த திருப்பொலி காவேரி யாறழ
கேய்ந்துவ ரத்திகழ் மாமோகை மேவிய
சேர்ந்த திருப்பத மோராறு மாமுக முடையோனே

பாம்பை மிகுத்தணி வார்சேய் நமோநம
சேர்ந்த னெனப்பெயர் மேயாய் நமோநம
பாய்ந்த மயிற்பரி வீரா நமோநம அடியார்தம்

பாங்கி லிருப்பவ ஈசா நமோநம
தீங்க ளுகுத்திடு நீபா நமோநம
பாண்பயில் பத்தர்க ணையா நமோநம முருகேசா

காம்புவ மித்திடு தோள்வேடர் மாமகள்
தேம்படு கற்பக நாடாளு வானருள்
காஞ்சன நற்கொடி போல்வாள் பராவிய மணவாளா

காண்பரு மெய்ச்சுடர் போல்வாய் நமோநம
நேர்ந்த வருட்குரு நாதா நமோநம
காந்த மலைக்கும ரேசா நமோநம வருவாயே

சாம்பரி சைத்தின மேயாய் விலாதருள்
தீர்ந்த பலப்பல ஆசாவி லாசர்செய்
தீங்கு மிகுத்திடு மாகாவி வாதமொய் மனனேகொள்

தாங்குப வக்கட லார்வேணீ நீயிணி
தோர்ந்து சிவப்பொரு ளீதேய டாவறி
சாந்த நிலைபடி வாய்வா வெனுவுரை யருள்வாயே.

THE B. N. PRESS, MADRAS.